1721

# நூதன
# பால சிக்ஷை

BY

**R. VIRARAGHAVAN**

*Junior Deputy Inspector of Schools*

1565
494 81186

WITH A FOREWORD
FROM

**MISS C. GORDON**

*Superintendent, Kindergarten Department,*
*Teachers' College, Saidapet.*

MADRAS:
…RASAWMY NAIDU & SONS
1929

[*Price 2 Annas*

TB
021,6 (1)
N29
176830

Printed at
The 'Caxton Press,'
Madras.

# முன்னுரை

தற்காலம் முதல் வகுப்புக்குரிய பாலபாடப் புத்தகங்கள் அனேகம் இருப்பினும் அவைகளிலுள்ள முறைகளுக்குச் சற்று மாறுபாடாக இப்புத்தகம் எழுதப்பட்டிருப்பதால் இதுவும் வெளி வரலாயிற்று. அம் மாறுபாட்டுக்குக் காரணம் இதை யாக்கியோ னுடைய கிண்டர்கார்டன் வகுப்புகளின் அனுபோகமே.

சாதாரணமாக எல்லா வகுப்புகளிலும் பாடங்கள் ஒன்றோ டொன்று சம்பந்தப் பட்டவைகளாகவே கற்பிக்கப்பட வேண்டு மென்று போதகாசிரியர்கள் சொல்லுகிறபடி குழந்தைகளடங்கிய பாலர் வகுப்பிலும் வாசகமென்றும் இயற்கைப் பாடமென்றும் கதையென்றும் கணக்கென்றும் பிரத்தியேகமான பாடங்களாகச் செய்யாமல் எல்லாப் பாடங்களையும் ஒன்றோடொன்று ஒட்டின வைகளாகவே செய்ய இப் புத்தகத்தில் ஒருவாறு பிரயத்தனப்பட் டிருக்கிறது. முதலில் ஒரு சிறு கதையைப் பிள்ளைகளுக்குச் சொல்லி அக்கதையில் சம்பந்தப்படும் சில முக்கியமான வார்த்தைக ளைக் கற்பிக்க முயல்வதே மேலான முறையாகும். ஒன்றுக்கொன்று பரஸ்பர ஸம்பந்தமுள்ளவையும் கதையை ஒட்டியவையுமான சில வார்த்தைகளைப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதில் பிள்ளைகளுக்கு விசேஷ பிரியம் எற்படும். தகுந்த சிறு கதைகள் கட்டுவதில் உபாத்தியாயர்கள் தங்கள் திறமையைக் காட்டவும் இட முண்டாகிறது. இடையே சில பிராணிகள் பொருள்கள் ஆகிய வைகளைப்பற்றி இயற்கைப்பாடம் கற்பிக்கவும் இடமேற்படுகிறது. எண்ணிக்கைப் பாடம் கைத்தொழில்கள் ஆகியவைகளும் இதன் பாடங்களில் சம்பவிக்கும் வார்த்தைகளினுதவியால் கற்பிக்கப்படக் கூடும். இம்மாதிரியான விசேஷ முறையை நண்பர்களுக்குக் காட்டும் பொருட்டே இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் முதல் பாகத்தில் எழுத்துக்களை ஒருவாறு வரிசைப் படுத்திக் கற்பிக்கப்படுகிறது. எல்லா எழுத்துக்களும் கற்பிக்கப் பட்ட பிறகு இரண்டாவது பாகத்தில் சில அப்பியாஸங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ் வப்பியாஸங்கள் வகுப்புக் குரி யவையா யிருப்பதுடன் சுவல்பமாயு மிருக்கின்றன. அவைகளையும் தகுந்த கதைகளை ஆதாரமாகக்கொண்டே கற்பிக்க முயலவேண்டும்.

இவ் விரண்டு பாகங்களும் ஒரு வருஷத்தில் மேற்சொன்ன முறையை அனுசரித்துக் கற்பிக்கப்பட்டால் பாலர்களுக்கு விசேஷ திறமையும் மேல் வகுப்புகளில் கற்பிக்கப்படும் எல்லாப் பாடங் களிலும் சற்று பிரியமும் எற்படும் என்பதிற் சந்தேகமில்லை.

126830

## FOREWORD

I have great pleasure in writing a foreword to this children's book by Mr. Viraraghava Ayyangar of the Madras Inspectorate. The first part of the book deals with the teaching of words, and as the lessons proceed, they are based on stories. As the writer has pointed out in his introduction, the lessons are first based on stories, conversation and talk, as suggested in my book — The Child and His Education —. The look-and-say method of teaching language has been found to be one of the most successful and I have no doubt that this little book based on that method will meet the demands of any teacher in his teaching of babies. The writer deserves the thanks of the teachers for bringing out this neat little book with plenty of pictures. I wish him every success in his new endeavour.

C. GORDON,

*Superintendent, Kindergarten Department,*

*Teachers' ollege, Saidapet.*

குறிப்பு: [பாடங்களின் அடியிலுள்ள கதைகளைப் பிள்ளைகள் படிக்கவாவது மனப்பாடம் செய்யவாவது கூடாது. அவைகள் உபாத்தியாயருக்கே.]



படம்

பட்டம்

ட ப ம

ட் ப் ம்



# ம ர ம்

# ர ம் ப ம்

| | | |
|---|---|---|
| ப | ம | ர |
| ப் | ம் | ர் |

ஒரு குளக்கரையில் பெரிய மரமொன் றிருந்தது. அதன் சமீபத்தில் ஒரு நாணற் புல்லு மிருந்தது. அந்த **மரம்** நாணற் புல்லைப் பார்த்து மிகவும் சிறிதா யிருக்கிறதென்று அதைப் பரிகாசஞ் செய்தது. சில நாட்களுக்குப் பிறகு அம்மரத்தின் சொந்தக்காரன் ஒரு **ரம்பம்** கொண்டுவந்து அம் மரத்தை அறுத்துத் தள்ளி விட்டான்.



# அ ர ம்

# க ட க ம்

| | | |
|---|---|---|
| ர | க | அ |
| ட் | க் | ர் |

ஒரு சிறு பெண் நகைகள் போட்டுக்கொள்ள அதிக ஆசைப்பட்டாள். அவள் தாயார் ஒரு கடகம் வாங்கிக் கையில் போட்டுவிட்டாள். அதை எப்போதும் கையிலேயே போட்டுக்கொண் டிருந்தாள். கை பெரிதாகப் போய் கடகம் கழற்ற முடியவில்லை. ஆகையால் ஒரு தட்டானைக்கொண்டு அரம் ஒன்றினால் வெட்டி அதை எடுத்துவிட்டாள்.



# காகம்

மாடம் ராகம்

ஆப்பம் தாகம்

ர க த

ஆ கா தா

ஒரு நாள் ஒரு வீட்டில் குழந்தை யொன்று ஒரு ஆப்பம் தின்றுகொண் டிருந்தது. பாதி தின்று விட்டு இன்னொரு பாதியை ஒரு மாடத்தில் வைத்திருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த காகம் ஒன்று அங்கு வந்து அதைத் தூக்கிக் கொண்டு போயிற்று. வெகு சந்தோஷமாக ராகம் பாடுவது போல கா கா வென்று வெகுநேரம் கத்திற்று. அதிக தாகம் உண்டாக தண்ணீர் குடிக்க ஒரு குளத்துக்குப் பறந்து போய் விட்டது.



# நாய்

| | |
|---|---|
| பயம் | அணு |
| காயம் | பந்தம் |

| | | |
|---|---|---|
| ந | ய | ய் |
| நா | ணு | ந்த |

ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவருக்குத் திருடர்களிடம் அதிக பயம். அவர் ஒரு நாய் வளர்த்து வந்தார். அதற்குத் தினந்தோறும் ஒரு அணுவுக்கு ரொட்டி வாங்கிப் போடுவார். ஒரு நாள் அவர் இராத சமயத்தில் திருடர்கள் வந்து அவர் பெண்ஜாதியை அடித்துக் காயம் பண்ணிவிட்டார்கள். உடனே அந்த நாய் வாயில் ஒரு பந்தம் கௌவிக்கொண்டு எஜமானன் இருந்த இடத்துக்கு ஓடி அவரை அழைத்துவந்து விட்டது. அவர் வந்து பெண்ஜாதிக்குத்தகுந்த வைத்தியம் செய்தார்.



# சக்கரம்

| | |
|---|---|
| சட்டம் | மச்சம் |
| சாயம் | தடாகம் |

| | | |
|---|---|---|
| ச | சா | கா |
| சீ | ரா | தா |

ஒரு வண்டிக்காரன் தன் வண்டியின் சக்காத்திற்கு சாயம் பூசியிருந்தான். அச் சக்கரத்திற்கு 12 சட்டங்கள் இருந்தன. அவை அழுக்கா யிருந்தபடியால் சக்கரத்தைக் கழுவ வண்டியை ஒரு தடாகத்துக்குக் கொண்டு போனுன். தண்ணீரில் போட்டதும் அநேக மச்சங்கள் வந்து சக்கரத்தை நக்கிச் சட்டங்களை மிகவும் சுத்தமாய் செய்துவிட்டன.



# டங்கா

| | |
|---|---|
| பங்கா | தங்கம் |
| கங்கா | அங்கம் |

| | | |
|---|---|---|
| ர | ந | ங |
| ங் | ஙா | ங்க |

ஒரு வீட்டில் கங்கா என்றொரு பெண்ணிருந்தாள். அவள் அனேக நகைகள் போட்டிருந்தாள். அவைகள் தங்க நகைகள். நல்ல உடையும் உடுத்தியிருந்தாள். ஒருநாள் கோயிலில் டங்கா அடித்தார்கள். உடனே கங்கா புறப்பட்டு கோயிலுக்குப் போனாள். அங்கு அதிக ஜனக்கூட்டமா யிருந்ததால் அங்கம் முழுமையும் வியர்த்துப் போய்விட்டது. ஆகையால் வீட்டிற்கு வந்து பங்கா போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.



# கிளி

| | |
|---|---|
| நரி | பழம் |
| சட்டி | இதழ் |

| | | |
|---|---|---|
| ள | ழ | இ |
| ர் | கி | டி |

ஒரு மரத்திலிருந்த **கிளி**யொன்று புஷ்பங்களின் இதழ்களுக்கு நடுவிலுள்ள தேனைக் குடித்துவிட்டு மரத்திலிருந்த பழங்களைத் தின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த **நரி**யொன்று மரத்தண்டை வந்து கிளியிடம் ஒரு **சட்டி**யைக் காண்பித்து பழங்களை அதில் போட்டுவைத்தால் பிறகு தின்னலாமென்று சொல்விற்று. கிளி அப்படியே செய்ய நரி ஒருநாள் இரவில் அப்பழங்களை யெல்லாம் தின்றுவிட்டு ஓடிவிட்டது.



# கீரி

| | |
|---|---|
| பீடம் | கத்தி |
| சீசா | இரத்தம் |

| | | |
|---|---|---|
| ஈ | பீ | மீ |
| சீ | கீ | டீ |

ஒரு வீட்டில் வளர்க்கப்பட்டுவந்த கீரி யொன்று தொட்டிலிலிருந்த குழந்தையைக் கடிக்க வந்த பாம்பொன்றை ஒரு பீடத்தி லுட்கார்ந்தபடி பார்த்துக்கொண் டிருந்தது. உடனே அதன்மேல் பாய்ந்து கத்தியால் வெட்டினதுபோல இரண்டு துண்டாக வெட்டிவிட்டது. அங்கு இரத்தத்தைக் கண்ட குழந்தையின் தாயார் கீரி குழந்தையைக் கடித்துவிட்டதென்று நினைத்து சமீபத்திலிருந்த ஒரு சீசாவை யெடுத்து அக்கீரியின்மேல் எறிந்தாள். அதனால் காயம்பட்டு அக்கீரி இறந்துவிட்டது.



# பாம்பு

| | |
|---|---|
| பசு | உடும்பு |
| குடம் | உளுந்து |

| | | |
|---|---|---|
| உ | கு | டு |
| து | சு | பு |

ஓர் இடையன் ஒரு பசுவை நல்ல உணவு கொடுத்து வளர்த்து வந்தான். அதிகமாக உளுந்து அரைத்து அதற்கு உணவாகக் கொடுப்பது வழக்கம். ஆகையால் அது அதிக பால் கறக்கும். ஒருநாள் இடையன் ஒரு கூடம் பால் கறந்து வீட்டில் வைத்திருந்தான். ஒரு பாம்பு அங்குவந்து அப்பாலைக் குடித்துவிட்டு விஷத்தைக் கக்கிவிட்டுப் போய்விட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் அங்குவந்த உடும்பு ஒன்று அப்பாலைக் குடித்தது. உடனே இறந்துவிட்டது.



# உ ர ல்

நிழல்　　காற்றாடி

காற்று　　மத்தளம்

ர　　ற　　ல்

ள　　றா　　ழ

ஒரு கிழவி ஒருநாள் ஒரு மரத்தடியில் உரல் ஒன்றைப் போட்டுக்கொண்டு மாவிடித்துக்கொண்டிருந்தாள். அந்த உரல் தன்னை இம்மாதிரி உலக்கையால் இடிக்கிறார்களே யென்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது அவ்வழியே போன சில பஜனைக்காரர்கள் **மத்தளம்** ஒன்றை இரண்டு பக்கத்திலும் அடிப்பதைப் பார்த்து தன் மேலான நிலைமைக்காக சந்தோஷப்பட்டுக் கொண்டது. பக்கத்திலிருந்த மைதானத்தில் சில பிள்ளைகள் **காற்றாடி** யொன்றைப் பறக்கவிட்டுக் கொண்டிருந்தார்கள். அது **காற்றினால்** இங்கும் அங்கும் தள்ளப்படுவதைப் பார்த்து தான் **நிழலில்** அசையாமல் இருப்பதை நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டது.



# ஊசி

மூடன் பூட்டு

தூண் கூட்டம்

ஊ கூ தூ

டூ பூ மூ

ஒரு மூடன் ஒருநாள் ஊசியொன்று வாங்கக் கடைக்குப் போனான். அங்கு கடைக்காரன் கொடுத்த ஊசி மிகவும் சிறிதாயிருந்தது. அது கீழே விழுந்துவிடுமென்று நினைத்து அங்கு கிடந்த பழைய தூணொன்றில் அதைச் சொருகி அந்தத் தூணைத் தூக்கிக்கொண்டு போனான். தன் வீடுபோனதும் வீட்டுக்கதவில் ஒரு பூட்டு பூட்டப்பட்டிருந்ததால் தூணைக் கீழே போட்டுவிட்டு நின்றான். அவன் வாங்கிவந்த ஊசியைப்பார்க்க அநேக ஜனங்கள் கூட்டமாக வந்தார்கள். ஊசி தூணிலிருந்து அகப்படவில்லை. ஆகையால் அங்கு வந்தவர்கள் எல்லோரும் அவன் முட்டாள்தனத்தைப் பார்த்து நகைத்தார்கள்.



எருது

செடி — எட்டு

நெல் — சிங்கம்

பெட்டி — வெகுமதி

1. எட்டு எருதுகள்
2. சிறு கடிகாரம்
3. கரடி காட்டு மிருகம்

எ — கெ

ஒரு பெரிய வயலில் அனேக செடிகளும் நெல் பயிரும் வளர்ந்திருந்தன. அதற்குச் சமீபத்திலுள்ள ஒரு காட்டிலிருந்த கரடியொன்று அடிக்கடி அங்கு வந்து அப்பயிர்களை அழித்து வந்தது. இதையறிந்த வயற்காரன் ஒருநாள் நல்ல கொழுத்த எட்டு எருதுகளை அவ் வயலில் மேயவிட்டிருந்தான். வழக்கம் போல் அக் கரடிமட்டில் வாராமல் காட்டிலிருந்த சிங்கம் ஒன்றையும் அழைத்துக் கொண்டுவந்து எருதுகளை அடித்துக் கொன்று தின்ன நினைத்தது. வயற்காரன் ஒரு வலை வைத்திருந்ததனால் அவ்வலையில் கரடியும் சிங்கமும் அகப்பட்டுக் கொண்டன. அவ்வாறு அந்த மிருகங்களைப் பிடித்ததற்காக அக்கிராமத்தார்கள் அவனுக்கு ஒரு சிறு கடிகாரம் வெகுமதியாகக் கொடுத்தார்கள். அதை அவன் பெட்டியில் வைத்துப் பூட்டியிருந்தான்.



# எ ற் ற ம்

| | |
|---|---|
| தேசம் | கேணி |
| நேரம் | தண்ணீர் |
| வேகம் | ஆழம் |

1. மர எற்றம்
2. கறுப்பு மேகம்
3 கிணற்று நீர் வற்றிற்று

ஏ எ கே

ஒரு தேசத்தில் மழையே இல்லை. ஆகையால் ஒரு ஆழமான கேணியிலிருந்து ஜனங்கள் ஜலமெடுத்தார்கள். ஒருவன் மர ஏற்றம் போட்டு வெகுநேரம் தண்ணீர் இறைத்தான். இறைத்த ஜலத்தையும் தரை உறிஞ்சிவிட்டது, ஆகையால் அதிக வேகமாக இறைத்தான். கிணற்று நீர் வற்றிவிட்டது. ஜலமில்லாமல் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள், கடைசியில் ஒருநாள் வானத்தில் கறுப்பு மேகங்கள் கண்டு அதிக மழை பெய்தது. அதைக் கண்டு ஜனங்கள் சந்தோஷமடைந்தார்கள்.



# கூடை

வடை — பாறை

கடை — பறவை

காக்கை — ஐந்து

1. சந்தைக் கடை
2. காக்கை கறுமை
3. கிழவி வடை சுட்டாள்

## ஐ   கை   ளை.

ஒரு சந்தைக் கடையில் ஒரு கிழவி வடை சுட்டுக்கொண்டு சுட்ட வடையை ஒரு கூடையிலெடுத்து வைத்திருந்தாள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த காக்கையொன்று பறந்துவந்து சில வடைகளைத் தூக்கிக்கொண்டு போய் சமீபத்திலிருந்த ஒரு பாறையின்மேல் வைத்துக்கொண்டது. பிறகு மற்ற காக்கைகளையும் அழைத்தது. இன்னும் நான்கு காக்கைகள் வர அவைகள் ஐந்து பறவைகளாக உட்கார்ந்து கொண்டு வடைகளைத் தின்றுவிட்டன.



# எலி

| | |
|---|---|
| மலை | பனை |
| அலை | முதலை |
| வளை | படகு |

1. எலி பிடி
2. மலைச் சரிவு
3. நிலா வெளிச்சம்

## ல ள லை ளை னை

கடலோரத்திலுள்ள ஒரு மலைச்சரிவில் பனைமர மொன்றிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு வளையில் அனேக எலிகள் இருந்தன. இதையறிந்த ஒரு மனிதன் ஒருநாள் இரவில் நிலா வெளிச்சத்தில் அவ்வளையைத் தோண்டி எலிகளைப் பிடித்து விட்டான். சிறிதுநேரம் கழித்து படகிலேறிக்கொண்டு கடலில் மீன் பிடித்துக்கொண் டிருக்கையில் கடலில் அலை அதிகமா யிருந்ததால் படகு கவிழ்ந்து அவன் கடலில் விழுந்து விட்டான். அந்தக் கடலிலிருந்த முதலை யொன்று அவனைக் கடித்து விழுங்கி விட்டது.



# ஒட்டகம்

நொண்டி தேன்

குருடு சொட்டு

ரொட்டி எறும்பு

1. நொண்டி மனிதன்
2. மற்றொரு மனிதன்
3. ஒட்டகம் திமில் பெரிது

## ஒ கொ ணொ

ஒரு நொண்டி மனிதன் ஒரு ஒட்டகத்தின்மேல் சவாரி செய்துகொண்டு போனான். அவன் வழியில் ஓரிடத்தில் இறங்கி ரொட்டி சாப்பிட்டுக்கொண் டிருக்கையில் ஒட்டகம் மட்டில் வழியே போய்விட்டது. அந்த ஒட்டகத்திற்கு ஒரு கண் குருடு. ஆகையால் அது ஒரு பக்கத்துப் புல்லையே மேய்ந்து கொண்டு போயிற்று. அதன்மேல் மாவும் தேனும் ஏற்றியிருந்ததால் இரண்டும் கீழே விழுந்திருந்தது. மற்றொரு மனிதன் அங்கு எறும்பு மொய்த்த அடையாளத்தைக் கொண்டு ஒட்டகம் போனவழியைக் கண்டுபிடித்து ஒட்டகத்தையும் பிடித்துவிட்டான்.



# ஓடம்

| | |
|---|---|
| ஓலை | ஓரம் |
| தோசை | கோழி |
| சோறு | தோட்டி |

1. பனை யோலை
2. கடலோரம்
3. வெகு விநோதம்

## ஓ ஒ கோ ணோ

ஒருநாள் சில மனிதர்கள் ஒரு ஆற்றை ஓடத்தில் கடந்து சென்றார்கள். சிலர் சோறும் சிலர் தோசையும் சிலர் கோழி முதலிய ஜந்துக்களும் கொண்டுபோனார்கள். ஒரு தோட்டி ஒரு ஓலைப் பெட்டியில் பாம்பு ஒன்றை வைத்திருந்தான். நடு ஆற்றில் போகையில் அவன் பாம்பை ஆடவிட்டு வேடிக்கை காட்டினான். அது ஆடினது வெகு விநோதமா யிருந்தது. திடீரென்று பெட்டியைவிட்டு வெளியே வந்து விட்டதைக் கண்டு ஜனங்கள் ஒரு பக்கம் ஒதுங்கினார்கள். ஓடம் கவிழ்ந்து ஜனங்கள் முழுகிப் போய்விட்டார்கள். அது கடலோரமான தால் அவர்க ளெல்லோரும் சமுத்திரத்தில் அடித்துக்கொண்டு போய்விடப் பட்டார்கள்.



# வௌவால்

| | |
|---|---|
| கரடி | கருடன் |
| யானை | வல்லூறு |
| சிங்கம் | கௌதாரி |

1. வௌவால் பறவை
2. இரக்கை இரண்டு
3. சௌக்கியமாக இருந்தது

## ஒ ஔ கௌ வௌ

ஒருகாலத்தில் வல்லூறு, கௌதாரி, கருடன் முதலிய பக்ஷிகள் கரடி, யானை, சிங்கம் முதலிய மிருகங்களுடன் சண்டையிட்டன. அப்பொழுது வௌவால் மிருகங்களோடு சேர்ந்துகொண்டது. ஆனால் பக்ஷிகள் ஜெயிக்கவே தானும் ஒரு பக்ஷியென்று சொல்லிக்கொண்டு பக்ஷிகளுடன் சேர்ந்தது. பிறகு மிருகங்கள் ஜெயிக்கவே தான் மிருகமென்று சொல்லி மிருகங்களுடன் சேர்ந்தது. இப்பொழுது மிருகங்களும் பக்ஷிகளும் அதனுடன் சேரவே இல்லை. அதுமுதல் வேறு பிராணிகளுடன் சேராமல் தொங்கிக்கொண்டே சௌக்கியமாக இருந்தது.



# ஊஞ்சல்

| | |
|---|---|
| பஞ்சு | குழந்தை |
| கஞ்சி | சத்தம் |
| பலகை | சமையல் |

1 பஞ்சு மெத்தை
2. கஞ்சி வெண்மை நிறம்
3. புரண்டு விழுந்தது

ஞ ஞா ஞு ஞ்ச

ஒரு சிறு குழந்தை ஒரு ஊஞ்சல் பலகையில் பஞ்சு மெத்தையில் படுத்துக்கொண் டிருந்தது. அதன் தாயார் சமையல் செய்து கொண்டிருந்தாள். அச் சமயத்தில் ஊஞ்சலிலிருந்த குழந்தை புரண்டு கீழே விழுந்துவிட்டது. அந்தச் சத்தம் கேட்ட தாயார் உடனே அங்கு ஓடிவந்தாள். அஜாக்கிரதையினால் சுடு கஞ்சியைக் காலில் கொட்டிக்கொண்டு விட்டாள். அந்தப் புண் ஆற அனேக நாட்கள் சென்றன. குழந்தைக்குப் பட்ட காயமும் ஆற அனேக நாட்கள் சென்றன.

176830



# வண்டி

| | |
|---|---|
| கிணறு | சண்டை |
| இரண்டு | தண்ணீர். |
| திருடன் | வெண்மை |

1. மாட்டு வண்டி
2. கிணற்று நீர்
3. ஏற்றம் இறைத்தான்

## ண. ண ணு ணை ண்ட

ஒரு மாட்டு வண்டியில் சிலர் ஒரு ஊருக்குப் பிரயாணம் போனார்கள். அப்பொழுது இருட்டு வேளை. மாடு வெண்மை நிறமானது. அதைக் கண்ட இரண்டு திருடர்கள் வந்து வண்டியை மறைத்து மாட்டை அவிழ்த்துவிட்டார்கள். அவர்களையும் அடித்துச் சண்டையிட்டார்கள். அவர்கள் கூக்குரலிட்டதைக் கேட்டு சமீபத்தில் ஒரு கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிவந்தார்கள். அனேக மனிதர்கள் கூடி விட்டதைக் கண்ட திருடர்கள் ஓட்டம் பிடித்தார்கள்.



# பன்றி

| | |
|---|---|
| குன்று | கம்பு |
| நான்கு | ஒன்று |
| தென்னை | வேட்டை |

1. தென்னந் தோப்பு
2. அகன்ற இடம்
3. பன்றியைக் கொன்றனர்

## ன் னு னை னெ ன்.ற

ஒரு ஊருக்குப் பக்கத்திலிருந்த குன்று ஒன்றின் சரிவில் நான்கு பன்றிகள் இருந்தன. அவைகள் பக்கத்திலிருந்த தென்னந்தோப்பு கம்பங்கொல்லை இவைகளில் வந்து கொல்லையை அழித்துக்கொண்டு வந்தன. அதைக் கண்டு கொல்லைக்குச் சொந்தக்காரர் அனேக ஆட்களைச் சேர்த்துக்கொண்டு தடிகளுடன் வந்து பன்றிகளை ஒரு அகன்ற இடத்தில் வேட்டையாடிக் கொன்றனர். அதுமுதல் பயிர்களுக்கு அழிவில்லாமல் ஜனங்கள் சௌக்கியமா யிருந்தார்கள்.



# ஜாடி

| | |
|---|---|
| ஜன்னல் | ரோஜா |
| உயரம் | ஜுரம் |
| மிட்டாய் | ஜீரகம் |

1. சாய்ப்பு மேஜை
2. ஜனங்கள் கூட்டம்
3. ஜாடிவாய் குறுகல்

ஜ ஜா ஜு ஜூ

ஒரு வீட்டில் உயரமாயிருந்த ஜன்னலில் ஒரு ஜாடி வைத்திருந்தது. அதற்குள் பலவகையான மிட்டாய்கள் வைக்கப்பட்டிருந்தன. ஜீரகமிட்டாய், ரோஜாப்பூ மிட்டாய் இவைகள் இருந்தன. அந்த வீட்டுக் குழந்தையொன்று பக்கத்திலிருந்த சாய்ப்பு மேஜையின் மேலேறி ஜன்னலை யெட்டி அதிலிருந்த ஜாடிக்குள் கையைவிட்டு ஒரு பிடி மிட்டாய் எடுத்தது. ஜாடியின் வாய் குறுகலாகையால் அதன் வழியாகக் கையை எடுக்க முடியவில்லை. அங்கேயே நின்றுகொண்டு அழுதுகொண்டிருந்தது. அதைக் கேட்ட ஜனங்கள் கூட்டமாக ஓடிவந்தார்கள். அதன் தாயார் பார்த்து இனித் திருடாமலிருக்கும்படி சொல்லிவிட்டு அதிக மிட்டாய்கள் தின்றால் ஜுரம் வருமென்று சொல்லி அதனிடம் இரண்டு மிட்டாய்கள் கொடுத்தாள்.



# புஷ்பம்

வருஷம் காஷாயம்
வேஷம் விசேஷம்
ரிஷி அபிஷேகம்

1. ரோஜா புஷ்பம்
2. காஷாய வஸ்திரம்
3. ரிஷி தபசு செய்தார்

ச: ஷ ஷா ஷு

ஒரு காட்டில் ரிஷி ஒருவர் வெகுகாலமாய் தபசு செய்து கொண்டிருந்தார். அதை அறிந்த சந்நியாசி யொருவர் அவரைத் தரிசிக்கப் போனுர். காஷாய வஸ்திரம் கட்டிக்கொண்டும் ஜடை முதலிய வேஷத்துடனும் அவரிடம் சென்று அவருக்கு விசேஷமான அபிஷேகம் செய்து மல்லிகை, ரோஜா முதலிய புஷ்பங்களால் செய்த மாலைகள் போட்டு உபசாரம் செய்தார். அம்மாதிரி அப்பெரியோரை வருஷந்தோறும் போய்த் தரிசித்து வந்தார் அதைக்கண்ட மற்ற ஜனங்களும் அவ்வாறே செய்து வந்தார்கள். பெரியோரைக் கனம் செய்யவேண்டும்.



# ஸர்ப்பம்

| | |
|---|---|
| ஸரம் | ஸீதை |
| வாஸனை | புற்று |
| விஷம் | விளையாட்டு |

1. மல்லிகை ஸரம்.
2. ஸர்ப்பம் படம்
3. ஸர்ப்பம் விஷம் அதிகம்

## ச ஷ ஸ ஸ[illegible] ஸ[illegible]

ஓர் ஊரில் ஸீதை என்ற ஒரு பெண் ஒருநாள் ஒரு மரத்தடியில் விளையாடிக்கொண்டிருந்தாள். அவள் தலையில் மல்லிகை ஸரம் வைத்துக்கொண்டிருந்தாள். அம்மரத்தடியில் ஒரு புற்று இருந்தது. விளையாட்டுக்காக அந்தப் புற்றுக்குள் கையை விட்டாள். அப் புற்றிற்குள்ளிருந்த ஸர்ப்பமொன்று புஷ்பத்தின் வாஸனையைக் கண்டு வெளியே ஓடிவந்தது. புற்று அப் பெண்ணின் கையால் அடைக்கப்பட்டிருந்ததால் பாம்பு சீறிக்கொண்டு கையில் கடித்துவிட்டது. வெளியில் வந்து படமெடுத்து ஆடிற்று. ஸர்ப்பத்துக்கு விஷம் அதிகமாகையால் விஷம் தலைக்கேறி அப்பெண் இறந்துவிட்டாள்.



# ஹாரம்

| | |
|---|---|
| ஹரி | ராஜ்யம் |
| தாஸன் | கஷ்டம் |
| ஸத்தியம் | சந்திரமதி |

1. உண்மை பேசு
2. அதிக கஷ்டம்
3. புஷ்ப ஹாரம் சொரிந்தார்கள்

ஹ  ஹா  ஹா

எப்பொழுதும் உண்மையே பேசும் ஹரிச்சந்திரன் என்றொரு அரசனிருந்தான். அவனிடம் ஒருநாள் ஒரு ரிஷிவந்து தான் கேட்பதை யெல்லாம் கொடுப்பதாக வாக்குப் பெற்றுக் கொண்டார். அதன்படி ராஜ்யம் முழுவதையும் கொடுத்து விட்டு சந்திரமதி என்ற தன் பெண்சாதி லோகிதாஸன் என்ற தன் பிள்ளை ஆகிய இருவர்களுடன் வனத்துக்குச் சென்று விட்டான். அங்கு அனேக கஷ்டங்களுக்கு உள்ளானன். கடைசியில் தேவர்கள் அவனுடைய ஸத்தியத்தை வியந்து புஷ்ப ஹாரம் சொரிந்து ராஜ்யத்தை மறுபடி அவனுக்கே கொடுத்து விட்டார்கள்.



# பக்ஷி

குருவி ஜயம்
விருக்ஷம் லக்ஷ்மி
பக்ஷணம் பருந்து

1. தித்திப்பு பக்ஷணம்
2. பெரிய விருக்ஷம்
3. பக்ஷிகள் உயர பறக்கும்

## க ஷ க்ஷ க்ஷ ப க்ஷ ி

ஒரு வீட்டில் லக்ஷ்மி என்றொருபெண்ணிருந்தாள். அவள் தித்திப்பு பக்ஷணம் தின்றுகொண் டிருந்தாள். அதைப் பார்த் துக் கொண்டிருந்த தருவி யொன்று பறந்துவந்து பக்ஷணத்தைப் பிடுங்கிக்கொண்டு ஒடிற்று. அதிக உயரத்தில் பறந்துகொண்டு பெரிய **விருக்ஷத்தில்** போய் உட்கார்ந்தது. அங்கு இருந்த ஒரு பெரிய **பருந்து** அதன்மேல் பாய்ந்து அதன் மூக்கிலிருந்த பக்ஷ ணத்தைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டது. ஆகையால் பல முள்ளவன் ஜயமடைவான்.

## இரண்டாம் பாகம்



சிறுவன் நீளம்
கவனம் காது
வளை : உபாத்தியாயர்

1. பாடத்தைப் படி
2. கவனமாகக் கேள்
3. எலி வளையில் நுழைந்தது
4. வால் மாத்திரம் நுழையவில்லை

ஒரு உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்துக்கொண் டிருக்கும்பொழுது அவர்களில் ஒரு சிறுவன் உபாத்தியாயர் சொல்வதைக் கவனியாமல் மூலையிலிருந்த வளை யொன்றில் ஒரு எலி நுழைவதைப் பார்த்துக்கொண் டிருந்தான். உபாத்தியாயர் பிள்ளைகளை தான் சொன்னதெல்லாம் காதில் நுழைந்ததாவென்று கேட்டதற்கு அச் சிறுவன் வால் மாத்திரம் இன்னும நுழையவில்லை யென்று சொன்னான். அதைக் கேட்ட உபாத்தியாயர் அச் சிறுவன் கவனியாததை அறிந்து அவனைத் தண்டித்தார்.

நீதி : கவனமாகக் கேள்.



நாய் ஆழம்

பாலம் நிழல்

ஆசை மாம்சம்

1. மரப் பாலம்.
2. அதிக ஜலம்.
3. மாம்சம் ஜலத்தில் விழுந்தது.
4. நாய் மாம்சத்தை இழந்தது.

ஒரு நாய் வாயிலொரு மாம்சத்துண்டைக் கௌவிக்கொண்டு போகையில் வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதில் அதிக ஜலமிருந்ததால் அதற்கு மரப்பாலமொன்று போடப்பட்டிருந்தது. நாய் அப் பாலத்தின்மேல் நடந்து போகையில் கீழே ஜலத்தைப் பார்க்க அதில் அதன் நிழலைக் கண்டது. அது வேறொரு நாயென்றும் அதன் வாயில் இன்னொரு மாம்சத்துண்டிருக்கிறதென்றும் நினைத்து அதைப் பிடுங்கிக்கொள்ள ஆசை கொண்டு திடீரென்று ஜலத்தில் குதித்தது. ஜலம் அதிகமாயிருந்ததால் தன் வாயிலிருந்த மாம்சத்துண்டையு மிழந்து வெகு கஷ்டத்துடன் கரை சேர்ந்தது.

நீதி: அதிக ஆசை கூடாது.



வெள்ளம் சண்டை

வெள்ளாடு குறுகல்

வாய்க்கால் கொம்பு

1. பாலம் குறுகல்.
2. ஆட்டுச் சண்டை.
3. ஆடுகள் ஜலத்தில் விழுந்தன.
4. ஆற்றில் ஜலம் அதிகம்.
5. வீண் சண்டை கூடாது.

ஒரு வெள்ளாடு அதிக ஜலமுள்ள ஓர் ஆற்றைக் கடக்க நேர்ந்தது. அந்த ஆற்றுக்கு ஒரு குறுகலான மரப்பாலமிருந்தது. அதன்மேல் நடந்துகொண்டு போகையில் அக்கரையிலிருந்து வந்துகொண் டிருந்த மற்றொரு வெள்ளாட்டைப் பாலத்தின் மத்தியில் சந்தித்தது. உடனே இரண்டு ஆடுகளும் ஒன்றோடொன்று சண்டையிட ஆரம்பித்தன. அவைகள் ஒன்றையொன்று கொம்பினால் குத்தின. பாலம் மிகக் குறுகலாகையால் ஆடுகளிரண்டும் ஜலத்தில் விழவே ஆற்றில் வெள்ளம் அதிக மிருக்க அவை இரண்டும் இறந்து போய்விட்டன.

நீதி : வீண் சண்டை கூடாது.



| | |
|---|---|
| நரி | சேவல் |
| இரை | கழுத்து |
| தந்திரம் | தகப்பன் |

1. சேவல் கூவும்.
2. இரண்டு கண்கள்.
3. நரி சேவலைத் தின்ன நினைத்தது.
4. அதை ஸ்தோத்திரம் செய்தது.
5. அதைக் கொன்று தின்றுவிட்டது.

ஒருநாள் அதிகாலையில் சேவலொன்று ஒருவீட்டின் முற்றத்தில் நின்றுகொண்டு கூவிற்று. அதைக் கேட்ட நரியொன்று சேவலைப் பிடித்துத்தின்ன எண்ணங்கொண்டு மெதுவாகச் சற்று சமீபத்தில் வந்து சேவலைப் பார்த்து அது வெகு அழகாகப் பாடிற்றென்றும் ஆனால் கண்களை மூடிக்கொண்டு அதன் தகப்பன் பாடுவது வெகு அழகாயிருக்குமென்றும் அம்மாதிரியே அதையும் பாடும்படி கேட்டுக்கொண்டது. சேவல் அது நிஜமென்று நினைத்துக் கண்களை மூடிக்கொண்டு கூவவே நரி திடீரென்று அதன்மேல் பாய்ந்து கௌவிக்கொண்டு போய்விட்டது.

நீதி : ஸ்தோத்திரம் செய்வதைக் கேட்கக்கூடாது.



| | |
|---|---|
| பள்ளம் | கிணறு |
| உயரம் | உணவு |
| வயல்கள் | முதுகு |

1. பசும்புல்.
2. பாழுங்கிணறு.
3. நரி தந்திரமுள்ள பிராணி.
4. ஆடு கிணற்றில் குதித்தது.
5. அதன் முதுகிலேறி நரி வெளியேவந்தது.

---

ஒருநாள் நரியொன்று வயல்களின் வழியாக ஓடிக்கொண்டிருக்கையில் அங்கிருந்த பாழுங்கிணற்றில் தவறிவிழுந்துவிட்டது. எழும்பி எழும்பிப் பார்த்தும் வெளியேவா முடியவில்லை. அப்பொழுது அவ்வழியே போன வெள்ளாடொன்றைப்பார்த்து அக்கிணற்றுக்குள் நல்ல பசும்புல் விருக்கிறதென்றும் அதை மேய வரும்படியும் சொல்லிற்று. ஆடு உடனே குதித்து மறுபடி வெளியே வாமுடியாமல் நின்றது. நரி ஆட்டைக்குனிந்து நிற்கச்சொல்லி அதன் முதுகில் ஏறிக் கரைசேர்ந்து ஆட்டையும் தூக்கி விடுவதாகச்சொல்லி அதன் முதுகிலேறி வெளியேவந்து உடனே ஓடிவிட்டது.

நீதி : **தந்திரமுள்ளவர்களை நம்பக்கூடாது.**



ஆமை ஜயம்
முயல் வேகம்
பந்தயம் தூக்கம்

1. முயல் வேகம்.
2. ஓட்டப் பந்தயம்.
3. முயல் கர்வங் கொண்டது.
4. மரத்தடியில் படுத்துத் தூங்கிற்று.
5. ஆமை விடா முயற்சியால் ஜயித்தது.

ஒரு ஆமையும் முயலும் ஒருநாள் சற்றுதூரம் ஓடப் பந்தயம் போட்டுக்கொண்டது. முயல் தான் அதிவேகமா யோடக்கூடு மென்ற கர்வத்தினல் சற்றுதூரம்போய் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிற்று. ஆமையோ மெள்ள மெள்ள ஊர்ந்து ஓரிடத்திலும் தங்காமல் கெலிப்பிடம் வந்து சேர்ந்தது. முயல் வெகு நேரம் தூங்கிவிட்டு விழித்தெழுந்து ஒரே ஓட்டமாக ஓடிவந்து பார்க்க ஆமை முன்னமேயே வந்திருந்தது. ஆகையால் விடாமல் முயற்சி செய்தால் காரியத்தை ஜெயிக்கலாம்.

நீதி ; விடாமுயற்சி செய்யவேண்டும்.



யானை துதிக்கை

ஆறு பட்டு

சேறு சிநேகிதன்

1. தையற்காரன்.
2. யானைப்பாகன்.
3. யானையைத் துதிக்கையில் குத்தினான்.
4. யானை சேற்றை வாரி அடித்தது.
5. யானைக்குக் குறும்பு செய்யக் கூடாது.

---

ஒருநாள் யானைப்பாகன் ஒருவன் யானையைக் குளிப்பாட்ட ஆற்றுக்கு ஓட்டிக்கொண்டு போனான். போகும் வழியில் அப்பாகன் தன் சிநேகிதனை ஒரு தையற்காரன் கடையண்டை நின்றுகொண்டு அவனுடன் பேசிக்கொண்டிருக்கையில் அத்தையற்காரன் குறும்புக்காகத் தன் ஊசியால் யானையின் துதிக்கையில் குத்தினான். யானை வலியைப் பொறுத்துக்கொண்டு ஆற்றுக்குப்போய்க் குளித்துவிட்டு தன் துதிக்கை நிறைய சேற்றை எடுத்துக்கொண்டு அவ்வழியே திரும்பி வந்தது. தையற்காரன் கடையண்டை வருகையில் ஜன்னலின் வழியாகச் சேற்றைத் தையற்காரன்மேலும் அவன் தைத்துக்கொண்டிருந்த உயர்ந்த பட்டு வஸ்திரங்களின்மேலும் அடித்துவிட்டது.

நீதி: யானைக்துக் துறும்பு செய்யக்கூடாது.



| | |
|---|---|
| மான் | ஓநாய் |
| இறைச்சி | ஒட்டம் |
| சிங்கம் | நஷ்டம் |

1. ஆட்டிறைச்சி.
2. கொழுத்த மான்.
3. மான் வெகுதூரம் ஓடிற்று.
4. நரிகள் ஆட்டிறைச்சியைத் தின்றுவிட்டன.
5. சிங்கம் இரண்டையும் இழந்தது.

ஒரு காட்டில் சிங்கமொன்று இரைதேடித் திரிகையில் ஒரு ஆட்டைக் காணவே அதையடித்து அதன் இறைச்சியைத் தின்ன ஆரம்பித்தது. அச்சமயத்தில் அவ்வழியே சற்று தூரத்தில் போய்க்கொண்டிருந்த கொழுத்த மானொன்றைக் கண்டது. உடனே ஆட்டிறைச்சியை அங்கேயே விட்டுவிட்டு மானையடிக்க அதைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் ஓடிற்று. மான் வெகு வேகமாகத் துள்ளித்துள்ளி ஓடினபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்குள் முதலில் அடித்த ஆட்டினிறைச்சியை நரிகள் தின்றுவிட்டுப் போயின. ஆகையால் பேராசை கூடாது.

நீதி : **பேராசை பெருநஷ்டம்.**



| | |
|---|---|
| பையன் | பணக்காரன் |
| கெட்டவன் | ஓரணா |
| நல்லவன் | வேலைக்காரன் |

1. வழிப் போக்கன்.
2. கெட்ட வார்த்தை.
3. பணக்காரன் சிறுவனைத் தண்டித்தான்.
4. கெட்ட பையன் நல்லவனானான்.
5. கெட்ட வார்த்தைகள் பேசக்கூடாது.

---

ஒரு சிறுவன் தெருவில் எப்பொழுதும் துஷ்டப்பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டும் கெட்டவார்த்தைகள் சொல்லிக் கொண்டு மிருப்பான். ஒருநாள் தெருவே போய்க்கொண்டிருந்த ஒரு வழிப்போக்கனைக் கெட்டவார்த்தைகள் சொல்லித் திட்டவே அம் மனிதன் அப் பையனை அழைத்து ஓரணா வெகுமதியாகக் கொடுத்துப் போய்விட்டான். அச் சிறுவன் வெகு சந்தோஷங் கொண்டு சற்றுநேரத்துக்கெல்லாம் பல வேலையாட்களுடன் அவ்வழியே போன ஒரு பணக்காரனை இன்னும் அதிகமாகத் திட்டினான். அதைக்கேட்ட பணக்காரன் மிக்க கோபங்கொண்டு தன் வேலைக்காரர்களைக் கொண்டு அச்சிறுவனைத் தண்டிக்கச் செய்தான்.

நீதி : **கெட்ட வார்த்தைகள் பேசக்கூடாது.**



| | |
|---|---|
| பூனை | நொண்டி |
| கால் | திருட்டு |
| பொறி | பக்ஷணம் |

1. எலிப் பொறி.
2. திருட்டுப் பூனை.
3. எலிப்பொறியில் பூனை அகப்பட்டது.
4. பூனைக்குக் கால்நொண்டி ஆயிற்று.
5. ஒன்றையும் திருடக்கூடாது.

ஒரு வீட்டில் எலிகள் அனேகம் இருந்துகொண்டு வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் நாசம் செய்து கொண்டு வந்தன. அவ்வீட்டுக்காரன் அவைகளைப் பிடித்துவிட நினைத்து ஒரு எலிப் பொறிவைத்து அதில் வாசனையுள்ள பக்ஷணமொன்றும் வைத்திருந்தான். அவ்வழியே வந்த திருட்டுப்பூனை யொன்று தனக்குத் திருடுவதற்கு அன்று ஒன்றும் கிடைக்காததால் அங்கிருந்த பக்ஷணத்தைத் தின்ன உத்தேசித்து அதை வாயாலெடுக்க எலிப்பொறியை ஒரு காலால் மிதித்துக்கொண்டது. உடனே பொறி டங் என்று விழ, கால் அகப்பட்டுக்கொண்டு நொண்டியாய்விட்டது.

நீதி : ஒன்றையும் திருடக்கூடாது.



கழுதை உப்பு
சுமை பளுவு
வைக்கோல் இலேசு

1. கழுதை மூட்டை சுமக்கும்.
2. கழுதை ஆற்றைக் கடந்தது.
3. உப்பு மூட்டை கரைந்தது.
4. வைக்கோல் நனைய பளுவாயிற்று.
5. கழுதை மூடத்தனமானது.

ஒரு வியாபாரி கனமான ஒரு உப்புமூட்டையை விற்பதற்காக ஒரு கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு போனான். வழியில் ஜலம் நிறைந்த ஆற்றைக்கடக்க நேர்ந்தது. ஆற்றில் போகையில் ஜலத்தினால் உப்புகரைந்துபோய் மூட்டை இலேசாக ஆயிற்று. கழுதை சந்தோஷத்துடன் ஆற்றைக் கடந்தது. சில நாட்களுக்குப் பிறகு அவ் வியாபாரி ஒரு வைக்கோல் கட்டை கழுதை மேலேற்றிக்கொண்டு அவ் வாற்றைக் கடந்து செல்ல நேர்ந்தது. கழுதை உப்பு மூட்டை கரைந்து இலேசானதை நினைத்துக்கொண்டு நடு ஆற்றில் போகையில் வெகுநேரம் தண்ணீரில் படுத்துக்கொண்டு விட்டது. வைக்கோல் நனைய அதிக பளுவாய் சுமை தூக்கமாட்டாமல் வெகுகஷ்டப்பட்டுக்கொண்டுபோயிற்று.

நீதி: கழுதை மூடத்தனமானது.



பசு இடையன்
முறடு பாதி
பிரபு எட்டணா

1. பிரபு பசு வாங்கினார்.
2. இடையன் பசுவை ஓட்டினான்.
3. பசு முறட்டுத்தனமாக இழுத்தது.
4. தன் கூலியில் பாதி கொடுத்தான்.
5. ஸத்தியம் தவறக் கூடாது.

---

ஒரு பிரபு வெகுதூரமாயுள்ள ஓர் ஊரில் பசு ஒன்று வாங்கி அதைத் தன் வீட்டுக்கு ஓட்டி வரும்படி ஒரு இடைப்பையனை நியமித்துவிட்டு ஊருக்கு வந்துவிட்டார். அந்த இடையன் பசுவை ஓட்டிக்கொண்டு பிரபுவின் வீட்டுக்குச் சமீபத்தில் வருகையில் பசு முறட்டுத்தனமாக அங்குமிங்கும் முட்களில் இழுத்தது. அச்சமயத்தில் அவ்வழியே போன மனிதனொருவனை அழைத்துப் பசுவைத் தன்னுடனோட்டி வந்தால் தன் கூலியில் பாதி கொடுப்பதாகச் சொன்னான். அப்படியே அம்மனிதன் ஓட்டிவரப் பிரபுவின் வேலைக்காரனொருவன் கூலியாக இடையனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கவே அதில் பாதியை அம்மனிதனுக்கு இடைப்பையன் கொடுத்தான். அம்மனிதன் எஜமானாகிய பிரபுவே யாகையால் இடையனின் நற்குணத்தை அறிந்து 10 ரூபாய் இனாமாகக் கொடுத்தார்.

நீதி : ஸத்தியம் தவறக்கூடாது.

## நூறு வருஷம் தூங்கின பெண்

அரசன் காடு

பெண் விவாகம்

கிழவி ராஜகுமாரன்

1. ராஜகுமாரி நித்திரை போனாள்.
2. நூறு வருஷங்கள் சென்றன.
3. ஒரு ராஜகுமாரன் அக்காட்டை அடைந்தான்.
4. ராஜ குமாரியைத் தொட்டு எழுப்பினான்.
5. அப்பெண்ணை விவாகம் செய்துகொண்டான்.

ஒரு அரசனுக்கு வெகுகாலம் பிள்ளையில்லாம லிருந்து கடைசியில் ஒரு பெண் பிறந்தது. அப்பெண்ணை வெகு ஜாக்கிரதையாயும் அருமையாயும் வளர்த்து வந்தார். ஒருநாள் அப்பெண் ஒரு ஊசியினால் தைத்துக்கொண்டிருக்கையில் ஊசி கையில் குத்த ஒரு தேவதையின் சாபத்தினால் இறந்தவள் போலாகி விட்டாள். இதை அறிந்த இன்னொரு தேவதை அப்பெண் நூறு வருஷங்களுக்குப் பிறகு அவ்வழியே இராஜகுமாரனொருவன் வர விழித்தெழுவா ளென்றும் அவ்வரண்மனையிலுள்ள எல்லோரும் அவ்விதமே நூறு வருஷம் வரையில் தூங்கவேண்டுமென்றும் ஆசீர்வதித்தது. அவ்வாறே நூறு வருஷங்களுக்குப் பிறகு இராஜகுமாரனொருவன் வந்து இராஜ குமாரியினழகைப் பார்த்து வியந்து அவளைத் தொடவே எல்லோரும் விழித்தெழுந்தார்கள். இராஜகுமாரன் அப்பெண்ணை விவாகமும் செய்துகொண்டான்.

# நற்குணமுள்ள சுந்தரி

1. சுந்தரி என்பவள் வேலைக்காரி.
2. பெண்கள் விருந்துக்கு சென்றார்கள்.
3. சுந்தரி மிகவும் துக்கித்தாள்.
4. தேவதை சுந்தரியை விருந்துக்கு அனுப்பினாள்.
5. அரசன் சுந்தரியை விவாகம் செய்து கொண்டான்.

---

ஒரு கனவானுக்கு ஒரு பெண்ணிருந்தாள். அவள் பெயர் சுந்தரி. அவள் அழகிலும் குணத்திலும் சிறந்தவள். அவள் தாயார் இறந்துவிட்டாள். அதன்பிறகு அவள் இளையதாயார் அவளை மிகவும் கொடூரமாக நடத்திவந்தாள். அவள் வீட்டு வேலைக்காரியாகவே இருந்துவந்தாள். ஒருநாள் அரசன் வீட்டில் ஒரு விருந்துக்கு கனவானுடைய பெண் சுந்தரியையும் அவள் இளையதாயாரின் இரண்டு பெண்களையும் அழைத்திருந்தார். ஆனால் சுந்தரிக்கு நல்ல ஆடை யாபரணங்களில்லையாகையால் அவள் போகவில்லை. மற்ற இருவர்களும் உயர்ந்த ஆடை தரித்துக்கொண்டு நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியிலேறிப் போனார்கள். சுந்தரி மிகவும் விசனமுற்றிருந்ததை அறிந்த தேவதையொன்று அங்குதோன்றி சுந்தரியை வெகு அழகாகச் சிங்காரித்து மிகவும் விலை யுயர்ந்ததாகக் காணப்பட்ட பெரிய எட்டுக்குதிரைகள் பூட்டிய வண்டியிலேற்றி அநேக தாவிகளுடன் அரசன் அரண்மனையில் விருந்துக்கு அனுப்பினாள். அரசன் இப்பெண்ணின் அழகையும் குணத்தையும் பார்த்து வியந்து அவளைத் தான் விவாகம் செய்வதாக வாக்கு கொடுத்து மறுநாள் வெகு ஆரவாரத்துடன் கலியாணம் செய்து கொண்டார். அன்றுமுதல் சுந்தரி சந்தோஷமாக அரண்மனையில் வாழ்ந்து வந்தாள்.



## ராஜா

இவர் நமது ராஜா.
இவர் பெயர் ஜியார்ஜ் அரசர்.
இவர் இங்க்லாந்தில் இருக்கிறார்.
இவர் மிகவும் நல்லவர்.
இவரைக் கடவுள் காப்பாராக.

சென்னை ராஜதானி கலாசாலைத் தமிழ்ப்
போதகாசிரியர்
கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

# பாட புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் பாட புத்தகம் ... ... ... | 0 | 3 | 0 |
| இரண்டாம் பாட புத்தகம் ... ... | 0 | 3 | 6 |
| மூன்றும் பாட புத்தகம் ... ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் பாட புத்தகம் ... ... | 0 | 6 | 0 |
| ஐந்தாம் பாட புத்தகம் ... ... ... | 0 | 7 | 0 |
| ஆறும் பாட புத்தகம் ... ... ... | 0 | 7 | 0 |
| ஏழாம் பாட புத்தகம் ... ... ... | 0 | 8 | 0 |
| எட்டாம் பாட புத்தகம் ... ... ... | 0 | 10 | 0 |
| ஒன்பதாம் பாட புத்தகம் ... ... | 0 | 10 | 0 |

## திராவிட வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| திராவிட பால பாடம் ... ... ... | 0 | 2 | 0 |
| முதல் திராவிட வாசகம் ... ... | 0 | 3 | 0 |
| இரண்டாம் திராவிட வாசகம் ... ... | 0 | 3 | 6 |
| மூன்றும் திராவிட வாசகம் ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் திராவிட வாசகம் ... ... | 0 | 6 | 0 |

## நூதன வாசக புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| நூதன முதல் வாசக புஸ்தகம் .. .... | 0 | 3 | 0 |
| நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் .... | 0 | 3 | 6 |
| நூதன மூன்றும் வாசக புஸ்தகம் ... .... | 0 | 4 | 0 |
| நூதன நான்காம் வாசக புஸ்தகம் ... .... | 0 | 6 | 0 |
| நூதன ஐந்தாம் வாசக புஸ்தகம் ... .... | 0 | 7 | 0 |
| நூதன ஆறும் வாசக புஸ்தகம் ... .... | 0 | 7 | 0 |
| நூதன ஏழாம் வாசக புஸ்தகம் ... .... | 0 | 8 | 0 |

### கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

## குமார வாசக புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதற்-புத்தகம் முதற்பகுதி | 0 | 2 | 0 |
| முதற்-புத்தகம் இரண்டாம் பகுதி | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் | 0 | 3 | 0 |
| மூன்றாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| நான்காம் புத்தகம் | 0 | 5 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 3 | 0 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 3 | 6 |
| நான்காம் வகுப்பு | 0 | 4 | 0 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 6 | 0 |

## சொற்றொடர் ஆக்கம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் | 0 | 3 | 0 |
| மூன்றாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## இலக்கணங்கள்

| | | | |
|---|---|---|---|
| சிற்றிலக்கண வினாவிடை—I-4-ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| சிற்றிலக்கணம் — II - முதல் பாரத்திற்கு | 0 | 4 | 6 |
| சிற்றிலக்கணம் — III - இரண்டாம் பாரத்திற்கு | 0 | 6 | 0 |
| சிற்றிலக்கணம் — IV - மூன்றாம் பாரத்திற்கு | 0 | 8 | 0 |

## கணித புத்தகங்கள் *

| | | | |
|---|---|---|---|
| புதுச் சட்டக் கணிதம் 2-3-ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 4-ஆம் வகுப்பு | 0 | 6 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 5-ஆம் வகுப்பு | 0 | 7 | 0 |

176830

Caxton Press
MADRAS.